பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

22 03 2026 SUNDAY 12 40 PM

ஆகாஷவாணி

<u>செய்திகள் -</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டு மக்கள் அனைவரும் தண்ணீரை சேமித்து, சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.
2. மாநிலங்களுக்கான வணிக எரிவாயு ஒதுக்கீட்டை மத்திய அரசு மேலும் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.
3. வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தரவேண்டும் என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
4. மேற்காசியாவின் பல நாடுகளின் மீது ஈரான் மேற்கொண்டு வரும் தாக்குதல்களை ஜி-7 நாடுகள் வன்மையாக கண்டித்துள்ளன.
5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை- கோவா அணியையும் இன்டர்காசி- பெங்களூர் அணியையும் எதிர்கொள்கின்றன.

...இனி விரிவான செய்திகள்...

<<<<<<>>>>>>

ஒவ்வொரு சொட்டு நீரை சேமிக்கவும் அதனை பொறுப்புடன் பயன்படுத்துவதை உறுதி செய்ய மக்கள் உறுதிமொழி எடுக்க வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக தண்ணீர்தினத்தை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், நீர் உயிர் வாழ்வின் ஆதாரமாகவும் பூமியின் எதிர்காலத்தை வடிவமைப்பதாகவும் உள்ளது என்று கூறியுள்ளார்.

தண்ணீரை சேமிக்கவும், சிக்கனமாக பயன்படுத்தவும் வலியுறுத்தியுள்ளார்.

நீர் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் நபர்களையும், நிறுவனங்களையும் பிரதமர் வெகுவாக பாராட்டியுள்ளார்.

<<<<<<>>>>>>

*பீகார் மாநிலம் உருவான தினத்தை முன்னிட்டு அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். 1912-ஆம் ஆண்டு இதே நாளில், வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டு பீகார் தனி மாநில அந்தஸ்தைப் பெற்றது.*

*இதையொட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "இந்தியாவின் பாரம்பரிய பெருமையை நிலைநிறுத்தி வரும் பீகார், வளர்ச்சியின் புதிய அத்தியாயங்களைத் தொடர்ந்து எழுதி வருவதாக கூறியுள்ளார்.*

*கடின உழைப்பாளிகளான பீகார் மக்களின் அர்ப்பணிப்பு, 'வளர்ச்சியடைந்த பாரதம்' என்ற இலக்கை அடைவதில் முக்கியப் பங்கு வகிக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "பீகார் மாநிலம் தனது செழுமையான கலாச்சாரம், மரபுகள் மற்றும் தனித்துவமான கலைகளுக்குப் பெயர் பெற்றது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இதற்கிடையே பட்னாவில் உள்ள காந்தி மைதானத்தில் மூன்று நாள் மாநில அளவிலான 'பீகார் திவாஸ்' கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.*

*இக்கொண்டாட்டங்களை முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் தொடங்கி வைக்கிறார். நாளை மறுநாள் நடைபெறும் நிறைவு விழாவில் அம்மாநில ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் சையத் அதா ஹஸ்னைன் உரையாற்றுகிறார்.*

*<<<<<<>>>>>>*

*சீக்கியர்களின் இரண்டாவது குருவான குரு அங்கத் தேவின் நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இதையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், குரு அங்கத் தேவ் உருவாக்கிய குருமுகி எழுத்து முறை அவரது போதனைகளை மக்களிடையே வெகுதொலைவிற்கு கொண்டு சேர்க்க உதவியது என்று குறிப்பிட்டுள்ளார்.*

*மேலும், சேவை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவப் பண்புகளை அவர் மேம்படுத்தினார் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*குரு அங்கத் தேவ் அவர்களின் கொள்கைகளும் போதனைகளும் இன்றும் சமுதாயத்திற்கு வழிகாட்டுவதாகவும் அடுத்தடுத்த தலைமுறைகளைத் ஊக்கப்படுத்தி வருவதாகவும் உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*<<<<<<>>>>>>*

மாநிலங்களுக்கான வணிக எரிவாயு ஒதுக்கீட்டை மத்திய அரசு மேலும் 20 சதவீதம் அதிகரித்துள்ளது இதன் மூலம் மொத்த ஒதுக்கீடு 50 சதவீதமாக தற்போது உயர்ந்துள்ளது

இந்த கூடுதல் ஒதுக்கீடு உணவகங்கள், தாபாக்கள், ஹோட்டல்கள், தொழிற்சாலை உணவகங்கள், பால் பண்ணைகள் மற்றும் அரசு, உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் மானிய விலையிலான உணவகங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படும். இது நாளை முதல் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றமான சூழலிலும், நாட்டில் பெட்ரோல், டீசல் அல்லது எல்பிஜி தட்டுப்பாடு ஏதும் இல்லை எனவும் பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை எனவும் பெட்ரோலிய அமைச்சகச் செயலாளர் திரு. நீரஜ் மித்தல் தெரிவித்துள்ளார்.

எரிவாயு பதுக்கல் மற்றும் கள்ளச்சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றிக்கொண்டு அக்குவா டைட்டன் என்ற கப்பல் கர்நாடக மாநிலம் மங்களூரு துறைமுகத்தை வந்தடைந்தது.

மேற்காசியாவில் நிலவும் போர் பதற்றம் காரணமாக ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளதையடுத்து தற்போது ரஷியாவில் இருந்து கச்சா எண்ணெய் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், அமெமரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் இருந்து பெட்ரோலி எரிவாயு ஏற்றிவந்த *Pyxis Pioneer* என்ற சரக்கு கப்பலும் மங்களூர் துறைமுகத்திற்கு வந்தடைந்தது.

முன்னதாக நந்தாதேவி என்ற எல்.பி.ஜி. டேங்கர் கப்பல் குஜராத்தின் வாடினார் துறைமுகத்தை வந்தடைந்தது.

அதேபோல முந்த்ரா துறைமுகத்தில் ஷிவாலிக் கப்பல் பெட்ரோலி எரிவாயுவை ஏற்றி வந்துள்ளது.

*Harmoz* நீரிணை பகுதியில் கப்பல் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அபாயகரமான சூழல்களை கடந்து இந்தியாவிற்கு தேவையான பெட்ரோலிய எரிவாயுவை இந்த இரு கப்பல்களும் கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

இந்திய அரசியலில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் தலைவராக மிக நீண்ட காலம் பணியாற்றியவர் என்ற புதிய வரலாற்று மைல்கல்லை பிரதமர் திரு. நரேந்திரமோடி எட்டியுள்ளார்.

இதன்மூலம் சிக்கிம் மாநில முதல்வராக எட்டாயிரத்து 930 நாட்கள் பதவி வகித்த பவன்குமார் சாம் லிங்கின் சாதனையை திரு. மோடி முறியடித்துள்ளார்.

குஜராத் முதலமைச்சர் மற்றும் நாட்டின் பிரதமர் பொறுப்புகளையும் சேர்த்து அவர் எட்டாயிரத்து 931 நாட்களை நிறைவு செய்து தனது 25-வது ஆண்டில் தடம் பதித்துள்ளார்.

பொது சேவையில் மக்களின் பணிக்காக தலைமைத்துவத்தில் இருந்து பணியாற்றி வருவது மிகப்பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

மேலும் சமூக வலைதளங்களிலும் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளங்களில் 10 கோடிக்கும் மேற்பட்டோர் அவரை பின்தொடர்ந்து வருகின்றனர். அவரது யூடியுப் சேனலுக்கு 3 கோடி பேர் சந்தாதாரராக உள்ளனர்.

இது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் அவர் மக்களுடன் கொண்டுள்ள வலுவான தொடர்பை பிரதிபலிப்பதாக உள்ளது.

<<<<<>>>>>>

தேர்தல் நடைபெற இருக்கும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசத்தில் வாக்குப்பதிவு நாளன்று ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகளை வாக்காளர்களுக்கு தலைமை தேர்தல் அதிகாரிகள் ஏற்படுத்தி தர வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் நிழலுடன் கூடிய காத்திருப்பு பகுதி, குடிநீர், சுத்தமான கழிவறை, மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான சாய்வு தள வசதி, தரப்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு அறை மற்றும் முறையான வழிகாட்டி பலகைகள் வைத்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

வாக்குச்சாவடிகளில் வேட்பாளர்களின் பட்டியல்கள், வாக்காளர்கள் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய தகவல்கள், அங்கீகரிக்கப்பட்ட அடையாள ஆவணங்களில் பட்டியல் குறித்த தகவல்கள் ஆகியவை வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

<<<<<>>>>>>

மேற்காசியாவின் பல நாடுகளின் மீது ஈரான் நடத்தி வரும் தாக்குதல்களை ஜி-7 நாடுகள் வன்மையாக கண்டித்துள்ளன.

கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர் பிரதிநிதிகள் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், மேற்காசிய நாடுகள் மட்டுமல்லாமல் உலகளாவிய பாதுகாப்பிற்கு இந்த தாக்குதல்கள் அச்சுறுத்தலாக உள்ளன என்றும் எனவே ஈரான் தனது ராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தை தடையின்றி வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் ஜி-7 அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரான் தனது கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை திட்டங்களை கைவிடவேண்டும் என்றும் அணுஆயுதங்ளை உருவாக்க ஈரானை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்றும் கூறியுள்ளனர்.

ஈரான் தனது சொந்த நாட்டு மக்கள் மீது நடத்தும் வன்முறை மற்றும் ஒடுக்குமுறைகளை உடனடியாக நிறுத்தவேண்டும் என்றும் அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

*Harmuz* நீரிணைப் பகுதியில் கன்னிவெடிகளை அகற்றும் பணிகளுக்காக பாதுகாப்பு படைகளை அங்கு அனுப்புவது குறித்து ஜப்பான் பரிசீலிக்க கூடும் என்று அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் *Toshimitsu Motegi* தெரிவித்துள்ளார்.

கன்னி வெடிகளை அகற்றும் தொழில் நுட்பத்தில் ஜப்பானின் தொழில் நுட்பம் மிகவும் திறன் வாய்ந்து என்று அவர் கூறினார்.

போரில் ஈடுபட்டுள்ள ஈரான், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் சண்டை நிறுத்தத்தை அறிவித்தால் மட்டுமே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்று அவர் ஒரு தொலைக்காட்சி நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

மேற்கு வங்கத்தின் இமயமலை அடிவாரப் பகுதிகள் மற்றும் சிக்கிம் மாநிலத்தின் ஒருசில இடங்களில் இன்று இடி, மின்னலுடன் கூடிய மழையும், பலத்த சூறாவளிக் காற்றும் வீசக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம், திரிபுரா, ஒடிசா மற்றும் மேற்கு ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலும் மழை பெய்யும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

கேரளா மற்றும் மாஹே பகுதிகளில் நாளை வரை வெப்பமான மற்றும் ஈரப்பதம் மிகுந்த வானிலை நிலவக்கூடும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இந்தியன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அனாகத் சிங், எகிப்தின் Hana Moataz-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி மும்பையில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறுகிறது.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்தியாவின் அபய் சிங், சக நாட்டு வீரரான வீர் சோத்ராணியை எதிர்கொள்கிறார்.

மும்பையில் இன்று இரவு 7-45 மணிக்கு இப்போட்டி நடைபெறுகிறது.

--------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி, கோவா அணியை எதிர்கொள்கிறது. சென்னையில் இப்போட்டி மாலை ஐந்து மணிக்கு தொடங்குகிறது.

இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் இன்டர்காசி அணி பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது. கொல்கத்தாவில் இப்போட்டி இரவு 7-30 மணிக்கு நடைபெறுகிறது.

<<<<<<>>>>>>